ருக்கிறேன். அமைச்சர் அவர்கள் சனிக்கிழமை பதில் சொல்லியதிலிருந்து எதிர்காலத்தில் நம்முடைய சர்க்கரை ஆலைகள் இயங்க முடியுமா......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்கு நாள் நேரத்தைக் குறிக்க வேண்டும். நேரத்தை பிக்ஸ் பண்ணிய பிறகு உங்களுடைய விளக்கத்தை எல்லாம் சொல்லுங்கள்.

(ஆ) சட்டமன்ற உறுப்பினர்களது புது விடுதியில் நடைபெறும் திருட்டுகள் குறித்து

திரு. மு. ஜான் வின்சென்ட் : நேற்று இரவு 12 மணிக்குப் பிறகு சட்டமன்ற உறுப்பினர்கள் புது ஹாஸ்டலில் 222 ஆம் எண் அறை....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் இதைப் பற்றி இங்கே பேசப் பேச நிறைய அப்படிப்பட்டவர்கள் வந்து பிரச்சினை வளருகிறது. காவல் துறையினரும், நம்முடைய செயலாளரும் கலந்து தேவையான நடவடிக்கை எடுப்பார்கள். உங்கள் நன்மைக்காகத்தான் சொல்லுகிறேன். தொடர்ந்து இவ்வாறு அங்கு நடந்து வருவதாக எனக்குத் தகவல்கள் வந்திருக்கின்றன. நானும் செயலாளரும் இதுபற்றிக் கடுமையான நடவடிக்கை எடுக்க இருக்கிறோம்.

நான் ஒரு வேண்டுகோள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு விடுக்கிறேன். உறுப்பினர்கள் அதிகமான விருந்தினர்களைக் கொண்டு வருகிறார்கள். அவர்களுக்கிடையில் இப்படிப்பட்டவர்களும் நுழைந்து விடுகிறார்கள். ஒவ்வொரு உறுப்பினரும் அவர்களை மற்றவர்களுடைய விருந்தினர் என்று நினைத்துக் கொள்கிறார்கள். பல பேர் இப்போது உள்ளே நுழைகிறார்கள். இரவில் ஜன்னல் வழியாக எடுத்திருப்பதாகத் தெரிகிறது. இந்த நிலைமையைப் போக்க உறுப்பினர்களும் ஒத்துழைக்கவேண்டும். இல்லையென்றால் இந்தப் பிரச்சினை வளர்ந்து கொண்டே போகும்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவர் அவர்களே, பொதுவாகச் சொல்வது சரியல்ல. நாங்கள் எல்லாம் குழுவிலே என்ன முடிவு செய்தோம் என்பதைப் பாருங்கள். முடிவு செய்ததன்படிதான் ஆட்களை அங்கே அனுமதிக்கிறோம், ஆகவே அவைகளை யார் செய்கிறார்கள் என்று கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கூத்தகுடி சண்முகம், திரு. அம்பிகாபதி ஆகியவர்களுக்கு குறிப்பிட்ட விருந்தினர்களுக்கு மேல் இல்லை என்பது எனக்குத் தெரியும், நான் எல்லா உறுப்பினர்களுக்கும் சொல்கிறேன்.

1979 மார்ச் 19]

திரு. சி. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, மப்டியிலே போலீசார் அங்கே வருகிறார்கள், கேட்டால் நாங்கள் காவல் துறையைச் சேர்ந்தவர்கள் என்று சொல்கிறார்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; அப்படியானால் அவர்களை எஸ்டேட் ஆபீசரிடம் அழைத்துச் சென்று அவரிடம் காட்டி அவர்தானா என்று கேட்க வேண்டும்.

திரு. சி. ஆறுமுகம் ; நாங்கள் ஏன் அவர்களை அழைத்துக் கொண்டு போய்க் கேட்க வேண்டும்.

திரு. க. அன்பழகன் ; தலைவர் அவர்களே, காவல் துறையைச் சேர்ந்தவர்கள் கண்காணிப்புக்காகவோ பொறுப்புக் காகவோ சாதாரண ஆடையிலே செல்வார்களானால் அவர்களை யாராவது சட்டமன்ற உறுப்பினர்கள் யார் என்று கேட்பார் களானால் ஐடன்டிட்டி கார்டை இவர்களிடம் அவர்கள் காட்டி அதன் மூலம் இன்னார் என்று நிரூபிப்பதற்கு வழி இருக்கிறது. அதே போன்று விருந்தினர்கள் என்று வருகின்றவர்கள், யாருடைய விருந்தினர்கள் என்று காட்டுகிற முறையிலே பச்சை அட்டையோ அல்லது நீல அட்டையோ அவர்களுக்குத் தரப்பட்டு அவர்கள் அந்த அட்டையுடன் தான் இருக்க வேண்டும், அட்டையில்லாமல் இருந்தால் அவர்கள் யாருடைய விருந்தினராக இருந்தாலும் உள்ளே அனுமதிக்கக் கூடாது என்ற நிலைமையிலே சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதி இருந்தால் தான் பாதுகாப்பு இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் ; பேராசிரியர் சொல்வது இரவு நேரத்திலே வருவதாயிருந்தால் சரி, ஆனால் பகல் நேரத்திலே வருகிறவர்களை அட்டை கொண்டுவரவேண்டு மென்று சொல்ல முடியுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; உறுப்பினர்களுடைய 2, 3 விருந்தினர்கள் எஸ்டேட் ஆபீசரிடம் சென்று அட்டை வாங்கிக் கொண்டு வரலாம் அல்லவா?

திரு. கூத்தகுடி ச. சண்முகம் ; தலைவர் அவர்களே, எங்களைப் பார்க்க பகலிலே ஆயிரக்கணக்கான பேர்கள் வருகிறார்கள். பல பிரச்சினைகளைச் சொல்வதற்காக வருகி றார்கள். அப்போது எல்லாம் அட்டையை வாங்கமுடியாது. அதற்காகத்தான் சொல்கிறேன். குழுவிலே கொண்டு வாருங்கள். அங்கே நாங்கள் பேசி முடிவு செய்கிறோம்.

திரு. அ. சுவாமிதாஸ் : தலைவர் அவர்களே, ஹவுஸ் கமிட்டி கூடுவதே இல்லையே ஏன் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தங்கள் யோசனையை ஏற்றுக் கொள்கிறேன், உட்காருங்கள்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: பேராசிரியர் ஒரு ஆலோசனை சொன்னார். பகல் நேரத்திலே எங்களிடம் வருகிறார்கள் என்றால் அவர்கள் கார்டு வாங்க முடியாது. ரொம்ப சிரமங்கள் வந்துவிடும், ஊரிலே எங்களைக் கேட்பார்கள், ஆகவே அதைப்பற்றி நல்ல முடிவு எடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது அவர் யோசனையே தவிர முடிவு அல்ல.

திரு. மு. ஜான் வின்சென்ட்: கதவுகளை அடைத்துவிட்டு படுத்து இருக்கிறோம் அறைக்குள்ளே. கதவுகளைத் திறந்து கொண்டு வந்து எடுப்பது இல்லை. பின்னாலே ஜன்னல் வழியாக கம்பை விட்டு எடுத்து இருக்கிறார்கள். ஆகவே விருந்தினர்கள் எடுப்பதில்லை, விருந்தினர்களுக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. போலீஸார் வராண்டாவிலேதான் நிற்கிறார்கள். ஆனால் பின் பக்கம் இருந்து—பின்பக்கம் பாதுகாப்பு இல்லை—எடுத்துவிடுகிறார்கள். எல்லா ஜன்னல்களையும் அடைத்துவிட்டு படுக்கச் சொல்கிறார்கள் காவல் துறையினர். எப்படி அவ்வளவு ஜன்னல்களையும் மூடமுடியும். ஆகவே இதைப்பற்றி உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: மற்ற மாநிலங்களிலே அண்டை மாநிலங்களிலே கேரளா உட்பட, என்ன நிலைமைகளைக் கையாள்கிறார்கள் என்று பார்த்து அந்த முறையைக் கையாண்டால் நமக்குப் பாதுகாப்பாக இருக்கும். விருந்தினர்கள் என்றால் நம்மைப் பார்த்துவிட்டுப் போகிறவர்கள் ஒரு ரகம், ஆனால் அங்கே வந்து தங்கக்கூடியவர்கள் இருக்கிறார்களே, அதுதான் அதிகம். இந்தியாவிலேயே வேறு எந்தச் சட்ட மன்றத்திலேயும் இல்லாத முறையிலே விருந்தினர்கள் அங்கே வந்து தங்கிக் கொண்டிருக்கிறார்கள். எங்கேயும் அது அனுமதிக்கப்படுவதில்லை. அந்த விடுதியிலே யாருமே விருந்தினர்கள் இரவு நேரத்திலே தங்கக்கூடாது, பகல் நேரத்தில் வந்து விட்டுப் போகலாம், ரெப்ரசன்டேஷன் சொல்லிவிட்டுப் போகலாம். ஆனால் இரவு நேரத்திலே தங்குவது என்பது எந்தச் சட்டமன்ற உறுப்பினர் விடுதியிலேயும் அனுமதிக்கப்படுவதில்லை. ஆகவே அந்த முறையிலே முடிவு எடுத்து பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1979 மார்ச் 19]

திரு. கூத்தகுடி ச. சண்முகம் ; தலைவர் அவர்களே, ஏற்கெனவே அந்தக் குழுவிலே 5 ரூபாயோடு, இரண்டு பேர்கள் தான் தங்கலாம் என்ற முறையை நாம் வகுத்து இருக்கிறோம், அதை நல்ல முறையிலே அமல்படுத்த வேண்டும். அந்த விதிமுறைக்குப் புறம்பாக முரணாக யார் நடந்தாலும் நடவடிக்கை எடுப்பதில் ஆட்சேபணை இல்லை. ஏற்கெனவே வகுக்கப்பட்ட முறை அமல்படுத்தப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; 2, 3 நாட்களில் ஹவுஸ் கமிட்டி கூடுவதற்கு ஏற்பாடு செய்கிறேன்.

திரு. இ. தமிழரசன் : தலைவர் அவர்களே, அங்கே எங்களிடம் வருகிறவர்கள் பெரும்பாலும் ஏழைகளாகத்தான் இருக்கிறார்கள், அவர்கள் வந்த வேலை உடனடியாக முடிய வில்லையென்றால் அவர்கள் வேறு எங்கேயும் போகமுடியாது, அவர்களை அங்கேதான் தங்கச் சொல்ல வேண்டியிருக்கிறது.

[முற்பகல் 10-10]

இரண்டாவதாக, நேற்றிரவு என்னுடைய அறையிலிருந்து 70 ரூபாயும், சில தஸ்தாவேஜுகளும் திருடுப் போயிருக்கிறது. பின்பக்கமாக யாரோ ஏறி வந்து எடுத்திருக்கிறார்கள். எனவே வருகின்ற விருந்தாளிகளுக்கும் களவு போனதற்கும் தொடர்பு இல்லை. பின்பக்கமாக நடப்பதால் இதைத் தாங்கள் முடிவு எடுத்து எங்கள்—சட்டமன்ற உறுப்பினர்களின் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்புத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்,

திரு. பி. எச். பாண்டியன் : பேரவைத் தலைவரவர்களே, சென்ற வாரம் இந்த அவையில் வழக்கறிஞர்கள் பிரச்னை.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் பிரச்னை வரும் பொழுது பேசலாம், உட்காருங்கள்.

திரு. பி. எச். பாண்டியன் ; எக்ஸ்பிளனேஷன் சொல்லி விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது வரும்பொழுது பேசலாம். அப்பொழுது சான்ஸ் தருகிறேன்.

திரு. அ. சுவாமிதாஸ் : தலைவரவர்களே, உறுப்பினர் விடுதிக்குள்ளே வரக்கூடியவர்கள் உறுப்பினர்களைப் பார்க்க வருகிறார்கள். உறுப்பினர்களுக்கு வேண்டிய....

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; ஹவுஸ் கமிட்டியைக் கூட்டுகிறேன் என்று சொல்லிவிட்டேன். பிரச்னை தீர்ந்து விட்டது. இப்பொழுது மேலும் வளர்க்க வேண்டாம்.

(3) அறிவிப்பு
மேலவைத் தலைவரிடமிருந்து வந்துள்ள செய்தி குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகள், திருத்தம் ஏதுமின்றி நிறைவேற்றப் பெற்றுள்ளன என்று மாண்புமிகு மேலவைத் தலைவரிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது :

1. தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு மதுவிலக்குத் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 13/1979);

2. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் கட்டுப்பாடு, கேட்டுப்பெறுதல் குறித்த (தற்காலிக அதிகாரங்கள்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 11/1979).

(4) உரிமைப் பிரச்னைகள்

(அ) அலைஓசை, முரசொலி, தினகரன் நாளேடுகள் மீது

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து அவை உரிமை மீறல் குறித்த பிரச்சனை.

9-3-1979 அன்று பேரவையில் மாண்புமிகு உறுப்பினர் சின்னசேலம் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள் ஒரு அவையுரிமை மீறல் குறித்த பிரச்சனையை எழுப்பினார்கள். 6-3-1979 அன்று பேரவையில் எழுப்பப்பட்ட சில கோஷங்கள் பேரவைத் துணைத் தலைவரால் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டிருந்தும், 6-3-1979 தேதியிட்ட ''அலை ஓசை'' நாளேட்டிலும், 7-3-1979 தேதியிட்ட ''தினகரன்'' மற்றும் ''முரசொலி'' ஆகிய நாளேடுகளிலும் வெளியிடப்பட்டிருந்தன என்றும், இது அவை உரிமை மீறிய செயலாகும் என்றும் அவர் குறிப்பிட்டார். உரிமை மீறல் பிரச்சனை பத்திரிகைகள் மீது இருப்பதால், அப்பத்திரிகைகளுக்கு எழுதிக் கேட்டு, பின்னர் என் தீர்ப்பை வழங்குவதாக நான் அறிவித்திருந்தேன்.

இப்பிரச்சினை குறித்துக் கேட்டதற்கு, ''அலை ஓசை'', ''தினகரன்'' நாளேடுகளின் ஆசிரியர்கள் கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளனர்.